[2019 ஜனவரி 8

(உ) மேலூர் தொகுதி, மேலவளவு கிராமம், மதுரை மத்திய சிறையில் பல ஆண்டுகளாக சிறையில் உள்ளவர்களை முன்விடுதலை செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

எனது மேலூர் தொகுதி, சென்னகரம்பட்டி, மேலவளவு கிராமத்தைச் சேர்ந்த 13 நபர்கள் மதுரை மத்திய சிறையில் கடந்த 14 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளனர். இந்த வழக்கில் 40 குற்றவாளிகள் சேர்க்கப்பட்டு, 17 பேருக்கு தண்டனை வழங்கப்பட்டது. இதில் 2008 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, ஏ1–அழகர்சாமி, முதல் குற்றவாளி உட்பட 3 பேர் முன்விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் விடுதலை செய்யப்பட்டதிலிருந்து சட்டம்–ஒழுங்குப் பிரச்சினையோ, வேறு எந்தப் பிரச்சினையோ இல்லாமல் கிராமத்தில் அமைதியாக, சகோதரர்களாக வாழ்ந்து வருகின்றனர். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, தமிழக சிறைகளில் ஆயுள் தண்டனை பெற்று, 10 ஆண்டுகள் வரை சிறைவாசம் அனுபவித்து வரும் சிறைக் கைதிகளை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் முன்விடுதலை செய்வதாக அறிவித்துள்ளார்கள். அதையொட்டி, கடந்த 14 ஆண்டுகளுக்கு மேலாக மதுரை மத்திய சிறையிலுள்ள 40–வது குற்றவாளி உள்ளிட்ட 13 நபர்களை முன்விடுதலை செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கனிவுடன் பரிசீலனை செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், எங்களுடைய இதய தெய்வம். . . (குறுக்கீடு)

2019 ஜனவரி 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்கார்ந்துகொண்டே இப்படியெல்லாம் பேச முடியாது.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு. . .* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Zero hour–ல் *நான் கூப்பிடாமல், உங்கள் சௌகரியத்திற்கு நீங்கள் பேசிக் கொண்டிருந்தால் எப்படி அவையை நடத்துவது? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–35

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *10 ஆண்டுகள் சிறைத் தண்டனையை முடித்திருக்கின்ற சிறைவாசிகள், டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முன்விடுதலை செய்யப்படுவார்கள் என்று மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து, தமிழகச் சிறைகளில் இருக்கின்ற 1,756 சிறைவாசிகள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு மத்திய சிறையிலும் இருக்கின்ற மாவட்டக் குழுவின்மூலம் பரிசீலனை செய்யப்பட்டு, பிறகு மாநிலத்தில் இருக்கின்ற ஆலோசனைக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டு, இதுவரை 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை முடித்தவர்களும், 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை நிறைவு செய்தவர்களும், கடும் நோயால் பாதிக்கப்பட்டிருக்கின்ற சிறைக் கைதிகள் உட்பட, தமிழகத்திலே சிறைத் தண்டனைக் குற்றங்களுக்காக வெளி மாநிலங்களிலே சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற 6 சிறைவாசிகள் உட்பட மொத்தம் 1,619 பேர் முன்விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். இதிலே 50 முஸ்லிம் சிறைவாசிகளும் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, மேலவளவு வழக்கிலே கைது செய்யப்பட்டு, சிறைத் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கின்றவர்களும் இந்த முன்விடுதலைக்கு மனு செய்திருந்தார்கள். 2008–ல் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அந்த வழக்கிலே குற்றம் சாட்டப்பட்டிருக்கின்ற முக்கிய குற்றவாளிகளான 1–ஆவது குற்றவாளி, 2–ஆவது குற்றவாளி ஆகியோர் சிறையில் 7*

ஆண்டுக்காலம் நிறைவு செய்ததற்காக அவர்கள் முன்விடுதலை செய்யப்பட்டு, 10 ஆண்டுக்காலம் அந்தக் கிராமத்திலே அவர்கள் அமைதியான முறையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள்; அது உண்மைதான். முதல் குற்றவாளி, இரண்டாவது குற்றவாளி எல்லாம் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். 10 ஆண்டுக்காலம் அந்தக் கிராமத்திலே எந்தவித சட்டம்–ஒழுங்குப் பிரச்சினையும் இல்லாமல் அமைதியான நிலை உள்ளது. மனு செய்திருக்கின்ற 47–வது குற்றவாளி, 13 ஆண்டுக் காலம் சிறைவாசம் அனுபவித்து வருகின்றார். அவருக்கு கிட்னி பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. உயர் நீதிமன்றத்திலும் அவருக்குப் பரிந்துரை செய்யச் சொல்லி தீர்ப்பு வந்திருக்கிறது. மாவட்ட நிருவாகமும், முன்விடுதலை செய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவும், அவர் விடுதலை செய்யப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்திருந்தது. ஆனால், மாநிலத்தில் இருக்கின்ற ஆலோசனைக் குழு அவரது மனுவை நிராகரித்திருக்கின்றது. ஆனால், அந்த மனு, நியாயமாகப் பரிசீலிக்கப்பட வேண்டியது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய அந்தக் கோரிக்கையை கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, மீண்டும் அதைப் பரிசீலனை செய்து, ஆவன செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஊ) திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம், ஆத்தூர், ஒட்டன்சத்திரம், பழனி ஆகிய பகுதிகளில் அமெரிக்கன் படைப் புழுவின் தாக்குதலால் மக்காச்சோளப் பயிர்கள் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள்.

திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம், ஆத்தூர், ஒட்டன்சத்திரம், பழனி ஆகிய பகுதிகளில் ஏறத்தாழ 40,000 ஏக்கரில் பயிர் செய்யப்பட்ட மக்காச்சோளப் பயிர்கள், அமெரிக்கன் படைப் புழுவின் தாக்குதலுக்கு உள்ளானதோடு மட்டுமல்லாமல், எதிர்பாராதவிதமாக, கஜா புயலின் தாக்குதலினாலும், 40,000 ஏக்கரில் பயிரிடப்பட்ட அத்தனை மக்காச்சோளப் பயிர்களும் முழுமையாகப் பாதிக்கப்பட்டு தரையோடு தரையாகப் படுத்த காரணத்தால், விளைச்சல் பெறுவதற்கான நிலையை எட்ட முடியவில்லை. குறிப்பாக, வறட்சிப் பயிரான மக்காச்சோளம் எங்களது மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் பயிர்